**மகியங்கனை பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைசமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 24 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூலை 06 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 23 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து மகியங்கனை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு டிசம்பர் 31 ஆந் திகதிக்கு ரூபா 13,473,753 பெறுமதியான 3 கட்டடங்கள் கணக்கில் காணப்படவில்லை. | சரியான கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 நி.கூற்றிய வெளிப்படுத்தி திருத்தப்பட்டுள்ளன. |

**(ஆ) கணக்காய்வுக்கென சாட்சிகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 8,263,052 பெறுமதியான காணி மற்றும் கட்டிட மீதி சம்பந்தமான உறுதிப்பத்திரம், மாற்றல் கட்டளைகள், வரைபடம் மற்றும் விரிவான இணைப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகள் உறுதிப்படுத்த தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணியில் சட்டரீதியான உரிமை மாற்றத்தை செய்யும்படி காணி ஆணையாளர் நாயகம், பிரதேச செயலாளர் வீடமைப்பு அதிகார சபையிடம் வேண்டுகோள் கொடுத்த போதும் மாற்றம் செய்யப்படவில்லை. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆண்டு இலக்கம் 15 பிரதேச சபைச் சட்டம் 122, 126(அ) மற்றும் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 7/520 இலக்க வர்த்தமானி பத்திரிகையில் அனுமதிக்கப்பட்ட உப விதியில் 39 ஆவது பந்தி | விளம்பர பலகை சம்பந்தமான உப விதியில் உள்ள அதிகாரப்படி விளம்பர பலகை இருக்கும் இடம் இணங்கண்டு கட்டணம் அறவிட வேண்டி இருந்த போதும் 2019 ஆம் ஆண்டிற்காக இணங்கானப்பட்ட இடங்களில் இருந்து ரூபா 264,400 அறவிடப்படவில்லை. | சபைக்கு சி.வே கட்டணம் அறவிடப்பட வேண்டும். | சபைக்கு கட்டணம் அறவிட வேண்டிய இருக்கும் இடங்களில் கட்டணம் பெறப்பட்டுள்ளன. |
| (ஆ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | நிதிப்பிரமானம் 104 | சென்ற வருடம் நடைபெற்ற 05 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக விசாரணை நடத்தப்படவும் அறிக்கையிடவும் இல்லை. | நிதிப் பிரமானங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | திருத்தம் செய்ய விலைமதிப்பு எடுத்து அது சரியானதா என்றது பற்றிய அறிக்கை எடுக்க தாமதம் ஆகியது. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,576,509 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டு வரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,935,268 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்டவருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரியும் வரியும் | 4,000,000 | 3,001,655 | 2,172,110 | 829,545 | 3,031,235 | 3,031,235 | 2,343,601 | 687,634 |
| (ii) | வாடகைகள் | 2,365,200 | 2,479,200 | 1,997,080 | 482,120 | 2,221,200 | 2,221,200 | 1,853,800 | 377,400 |
| (iii) | நீர்க் கட்டணம் | 4,000,000 | 4,920,200 | 3,871,534 | 1,048,666 | 4,200,000 | 4,857,452 | 3,771,596 | 1,085,859 |
| | மொத்தம் | 10,365,200 | 10,401,055 | 8,040,724 | 2,360,331 | 9,452,435 | 10,109,887 | 7,968,997 | 2,150,892 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| 03 வருடத்திற்கு மேலாக காணப்பட்ட கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 21,302,139 மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும் | நிலுவை வருமானம் தொகை ஏறக்குறைய ரூபா 256,000 பெற்றுக் கொண்டோம். மிகுதி அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 2,428,933 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 2,500,000 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றும் இணைப்பு தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிலுவை முத்திரைக் கட்டணத்தில் தற்போது ரூபா 1,217,253 பெற்றுக் கொண்டோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச் சேவைகள், பொதுவழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தின் 126 பந்தியின் பிரகாரம் 30 நோக்கம் செய்வதற்கு உபவிதிகள் செய்யப்பட வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 10 நோக்கங்களுக்காக உபவிதிகள் செய்யப்பட்டது அல்லது உள்ளீர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகள் செய்யாத காரணத்திற்காக உபவிதிகள் செய்யப்பட வேண்டும். | உபவிதி தயாரித்து மாகாண உள் திணை அனுப்பப்படவுள்ளமை. |

**(ஆ) செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க வேண்டும் | எதிர்வரும் காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கின்றேன். |

**(இ) நிலை பேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை ஐக்கியநாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக் கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் சம்பந்தமாக உத்தியோகத்தருக்கு பயிற்சி தேவைப்படும். |

**3.2 சொத்து செய்யப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்த தவறியமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டில் ரூபா 3,586,027 செலவு செய்து வேலை முடிவடைந்து சந்தைக் கட்டடம் குப்பை பிரித்தெடுத்து களஞ்சியப்படுத்த பயன்படுத்தியுள்ளன. | கட்டும் போது இருக்கும் நோக்கத்திற்கு பயன்படுத்த வேண்டும். | அந்த கட்டடத்தின் அளவு சந்தை கொண்டு நடத்த போதாத படியால் குப்பைகள் சேர்த்து பிரித்து களஞ்சியப்படுத்த பயன்படத்தியுள்ளோம். |

**3.3 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுசந்தைப் பிரதேசத்தில் மற்றும் சந்தை தொகுதியிலுள்ள 51 கடைகளில் இருந்து 4,098,290 பெறுமதியான வாடகை வருமானம் அறவிடப்படவில்லை. | நிலுவை வாடகை வருமானம் அறவிடப்பட வேண்டும். | வரி ஒப்பந்தத்திற்கான விடய அமைச்சின் அனுமதி கிடைத்த பின் அவ் நிலுவை வருமானத்தை அறவிடுவேன். |
| (ஆ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிட வேண்டிய கலிபவுசர் வருமானம் மற்றும் பக்கோ இயந்திர வருமானம் ரூபா 247,806 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்க வேண்டும். | இரு நிறுவனங்களில் தற்போது பணம் கிடைத்துள்ளது. மிகுதி இரு நிறுவனங்களில் இருந்து நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம். |
| (இ) | 3 வருடத்திற்கு மேலான காலத்திலிருந்து காணப்பட்ட செலுத்த வேண்டிய சென்மதியாளர் மீதி ரூபா 11,330,039 மீளாய்வாண்டிலும் தீர்ப்பனவு செய்யவில்லை. | தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 86 வீதம் தற்போது தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. மிகுதி தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| சபை எல்லைக்குள் உள்ள 52 சுடலைகள் உரிமை மாற்றம் செய்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மாற்றம் செய்யத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாற்றம் செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு 8 பதவிக்கு 16 வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும். | அனுமதிக்கப்பட்ட பதவி வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும். | பதவி, வெற்றிடம் பற்றிய விபரம் மாகாண உள்ளுராட்சி ஆணையாளருக்கு அறிவித்தல் வழங்க ஏற்பாடு செய்கின்றேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டுநிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும முகாமைத்துவ குழு கூட்டம் 2 மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | குறைந்தது ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி ஒரு வருடத்தில் 4 கணக்காய்வு மற்றும முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியான முறையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் செய்கின்றேன். |